**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 152 of 2024

Depositions of PW - 4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திருமதி.பிரவீணா

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்போது சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.01.2018 ம் தேதி தலைமை காவலர் முத்துசாமி நெகமம் காவல் நிலையத்தில், நிலைய அலுவலில் இருந்தபோது ரத்தினசாமி மகன் ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று வழக்கின் தன்மைப்படி நெகமம் காவல் நிலைய குற்ற எண்.14/2018 சட்டப்பிரிவு 279, 304-A இதச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர், பொள்ளாச்சி அவர்களுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை ஆய்வாளர்

சண்முகசுந்தரம் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் அன்றைய தினமே மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நடராஜன் மற்றும் குமரேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் ரமேஷ், பொன்மணி, பொன்செல்வி, நடராஜ், குமரேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. மேலும் சம்பவத்தில் இறந்த ரத்தினசாமி என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் ரத்தினசாமி என்பவரின் பிரேதத்தையும் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மேலும் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 57 M 0388 இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளார். ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரியை கைது செய்து நிலைய ஜாமினில் விடுவித்துள்ளார். சாட்சிகள் முத்துசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. மேலும், விபத்து ஏற்படுத்திய இருசக்கர உரிமையாளர் அவர்களை நரசிங்கமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத பரிசோதனை மேற்கொண்ட பொள்ளாச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் ஜனார்த்தனன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஆய்வு மேற்கொண்ட மோட்டார் வாகன ஆய்வாளர் முனுசாமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 279, 304-A -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சரிவரப் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலான

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**

**Judicial Magistrate,**

**Sulur.**